DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII - CODE OF ORIGINAL PROCEDURE)
IN THE COURT OF ASSISTANT SESSIONS , DHARAPURAM
**Sessions Case No.177/2023**

**(Preliminary Register.No.6/2023 )**
Deposition of Witness **அ.சா. 2 ன் வாக்குமூலம்**

Prosecution Witness No.2

| | | | |
|---|---|---|---|
| NAME: | குணசேகரன் | FATHER'S NAME: | பழனிச்சாமி |
| VILLAGE: | தாராபுரம் | TALUK: | தாராபுரம் |
| CASTE: | இந்து | CALLING: | டாஸ்மார்க் கடையில் மேற்பார்வையாளர் |
| RELIGION: | | AGE: | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 27.06.2025.
1,3 எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை
<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது தாராபுரம் பூளவாடி ரோட்டில் குடும்பபத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது கடைஎண்.3428 என்ற எண்ணுள்ள டாஸ்மார்க் கடையில் நான் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு பாலசுப்பிரமணியம் நகர் டாஸ்மார்க் கடை எண்.3439 ல் மேற்பார்வையாளராக பணிபுரிந்தேன். அப்போது என்னுடன் கம்மம்பட்டியை சேர்ந்த சிவக்குமார், காமராஜபுரத்தை சேர்ந்த சுரேஷ் ஆகிய இருவரும் விற்பானையாளராக பணியில் இருந்தார்கள். கடந்த 25.01.2021 ம் தேதி விற்பனையாளர்கள் சுரேஷ், சிவக்குமார் ஆகிய இருவரும் பணியில் இருந்தார்கள். அன்று இரவு 8 மணிக்கு மேல் சுரேஷ் என்பவர் வீட்டில் இருந்த அவரது மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்று சொல்லிவிட்டு பணியில் இருந்து கிளம்பிவிட்டார். அதன்பின்பு மற்றுறொரு விற்பனையாளர் சிவக்குமார் மட்டும் பணியில் இருந்தார். நான் அன்றைய தேதியில் பணிநிமித்தமாக கோயமுத்தூர் சென்றிருந்தேன். நாங்கள் வழக்கமாக டாஸ்மார்க் கடையின் விற்பனை முடித்துவிட்டு அங்கு போதிய பாதுகாப்பு இல்லாததால் பணத்தை எடுத்து வருவது வழக்கம். அவ்வாறு பணத்தை எடுத்து வரும் போது தச்சம்புதுார் ரோட்டில் வந்து கட்ரோடு வழியாக பொள்ளாச்சி ரோடு வருவது வழக்கம். கடந்த 25.01.2021 ம் தேதி இரவு 10.15 மணிக்கு சிவக்குமார் எனக்கு போன் செய்தார். அப்போது டாஸ்மார்க் கடையை மூடி விட்டு விற்பனை பணம் ரூ. 1,12,310/– எடுத்து வந்த போது கட்ரோடு வழியாக பொள்ளாச்சிரோடு செல்லும் இடத்தில் 3 நபர்கள் என்னை வழிமறித்து அடித்து விட்டு பணத்தை பிடிங்கி சென்றுவிட்டதாக சொன்னார். நான் உடனே பேருந்துநிலையத்திலிருந்து என்னுடைய இருசக்கர வாகனத்தில் சம்பவ இடம் சென்றேன்.

2) அப்போது அங்கிருந்த சிவக்குமார் என்னிடம் நான் கடையை மூடிவிட்டு வழக்கம் போல் என்னுடைய கருப்பு நிற பட்டன்லாக் பையில் ரூ.1,12,310/– எடுத்துக்கொண்டு Super Splender இரு சக்கர வாகனத்தில் தச்சம்புதுார் ரோட்டில் இருந்து பொள்ளாச்சி ரோடு திரும்பும் கட்ரோட்டிற்கு அருகில் 3 நபர்கள் வழிமறைத்து

என்னை பாட்டிலால் இடது தலையிலும், வலது கண்ணத்திலும் அடித்துவிட்டு என்னை கீழே தள்ளி காலால் எட்டி உதைத்தும், அங்கிருந்த ஒரு நபர் பேக்கை புடுங்குடா என்றவுடன் அருகில் இருந்த நபர் பேக்கை பிடிங்கிக்கொண்டு சென்றுவிட்டதாக சொன்னார். சிவக்குமாருக்கு ரத்த காயம் பழமாக இருந்ததால் நான் அவரை என்னுடைய இரு சக்கர வாகனத்தில் ஏற்றிக்கொண்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு சிவக்குமாரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்த்தேன். பின்பு நான் என்னுடைய உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்துவிட்டு சிவக்குமார் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் காவல் ஆய்வாளருக்கு நான் சம்பவ இடத்தை அடையாளம் காட்டினேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>1,3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் M.A. டிகிரி படித்துள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியில் நான் டாஸ்மார்க் கடையில் மேற்பார்வையாளராக பணி செய்து வந்தேன். அ.சா.1,3 ஆகியோர் எனக்கு கீழ் வேலை செய்யும் பணியாளர்கள். இந்த சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. அ.சா.1 சிவக்குமார் சொல்லி தான் எனக்கு தெரியும். நான் 18 ஆண்டுகளாக டாஸ்மார்க் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். டாஸ்மார்க் கடையின் வரவு செலவு விவரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். அ.சா.1 சிவக்குமாரின் வேலை அந்த கடையில் விற்பனை செய்வது மட்டும் தான். கடையின் வரவு செலவு பார்ப்பது, பாதுகாப்பாக வைப்பது, பணத்தை வங்கியில் போடுவது என்னுடைய பொறுப்பு தான். பணத்தை எடுத்துச்செல்வதற்கு அ.சா.1க்கு எந்த அதிகாரமும் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் சாலை ஆட்கள் நடமாட்டம் குறைவான சாலை ஆகும். அந்த சாலை வழியாக தான் நிறைய நபர்கள் மது அருந்தி பாட்டில்களை உடைத்து போடுவார்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு நாளும் எவ்வளவு பணம் வசூலானது என்று ஒரு குறிப்பேட்டில் குறித்து வைப்பது வழக்கம். அதே போல் சம்பவம் நடந்த நாளிலும் குறித்து வைத்துள்ளேன். சம்பவம் நடந்த தேதியில் நான் என்ன வேலையாக வெளியில் சென்றிருந்தேன் என்று போலிஸ் விசாரணையின் போது குறிப்பிட்டு சொல்லவில்லை. அ.சா.3 சுரேஷ் என்ன வேலையாக சென்றிருந்தார் என்று நான போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை. நான் அது போல் போலிஸ் விசாரணையில் எதுவும் சொல்லாமல் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 பணம் காணாமல் போனதாக என்னிடம் இரவு 10.15 மணிக்கு சொன்னார். நான் சம்பவம் நடைபெற்று ஒரு 10 நிமிடத்தில் நான் சம்பவம் இடம் வந்தேன். நான் அங்கு வந்தவுடன் போலிசாருக்கு தகவல் சொல்லவில்லை.

2) சம்பவம் நடந்த இடத்திலிருந்து தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு ஒரு 10 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். காவல் நிலையம் வழியாக தான் அரசு மருத்துவமனைக்கு வரவேண்டும் என்றால் சரிதான். நடந்த சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனது முதல் விசாரணையில் சம்பவம் நடைபெற்ற இடம் நேரடியாக தெரியாது. சிவக்குமார் சொல்லி தான் தெரியும். போலிசார் வரவு செலவு குறித்து வைத்த குறிப்பேட்டை என்னிடம் கேட்கவில்லை. நானும் அவர்களிடம் கொடுக்கவும் இல்லை. நோட்டு, பில்புக் அனைத்தும் அந்த பேக்கில் தான் இருந்தது. அவ்வாறு நோட்டு, பில்புக்கும், சாவி, சிட்டா காணாமல் போனது என்று போலிஸ் விசாரணையில் சொன்னீர்களா என்றால் சொன்னேன். நான் போலிஸ் விசாரணையில் சொல்லாமல் தற்போது நோட், பில்புக், சாவி, சிட்டா ஆகியவை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றும் நானும், அ.சா.1

சிவக்குமாரும் சேர்ந்து வேறு செலவு செய்துவிட்டு மேல் அதிகாரியிடம் சொன்னால் வேலைக்கு பிரச்சினை வரும் என்று என்னி பொய்யாக புகார் கொடுத்து புகார் கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 ஐ யாரும் அடிக்கவும் இல்லை, காயம் அடையவும்இல்லை என்றும் விபத்தில் காயம் ஏற்பட்டு அதை அடித்ததாக சொல்வது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டு அதனடிப்படையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

(ஒப்பம்.கு.சக்திவேல்)
சார்பு நீதிபதி
தாராபுரம்.